பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 கார்த்திகை 17 துல்ஹஜ் 20 இதழ் 292
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-12-77



3-12-77
நாவலர்
குருபூசையை
முன்னிட்டு
நாவலர்
நீதிவாக்கியம்

என்ற புத்தகத்தை 10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் சோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்

## 'கிளர்ச்சி நடத்த தருணம் அல்ல'

நாகபட்டினம், டிச 1

இன்று இங்கு விஜயம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ் நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரண வேலைகளுக்கு மத்திய அரசு அளித்துவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

தி. மு. கழகத்தினரின் உத்தேச (9ம் திகதி) ஆர்ப்பாட்டங்கள் குறித்து முதலமைச்சர் கருத்து வெளியிடுகையில், 'கிளர்ச்சி நடத்த இது தருணம் அல்ல' என்று கூறிவிட்டு 'தி மு-க. தலைவர்களை விடுவிக்க முடியாது. கைதானவர்கள் விரும்பினால் ஜாமீனில் வெளியே வரலாம்' என்றார்.

# பட்ஜட்டை ஆதரித்து - அரசுக்கு சாதகமாக- கனகரத்தினம் வாக்களித்தார்!

(கொழும்பு)

**தேசிய அரசுப் பேரவையில் நேற்றிரவு நடைபெற்ற பட்ஜட் வாக்கெடுப்பில், தமிழர் கூட்டணியைச் சேர்ந்த பொத்துவில் தொகுதி தே. அ. பேரவை உறுப்பினர் திரு. எம். கனகரத்தினம் அரசாங்கத்துக்கு சாதகமாக வாக்களித்தார்!**

இந்த வாக்கெடுப்பில் பட்ஜட்டை ஆதரித்து 131 பேரும் எதிர்த்து 34 பேரும் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும் திரு. செ. இராசதுரை, திரு. எஸ் தொண்டமான் வரவில்லை. திரு எம் கனகரத்தினம் தவிர்ந்த ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பீக்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

பட்ஜட் உரை மீதான 2-வது கட்ட வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்றிரவு 8-55க்கு இடம்பெற்றது. குழுநிலை மீதான வாக்கெடுப்பு இம்மாதம் 23-ந் திகதி இடம் பெறும். தேசியஅரசுப்பேரவை இன்று மீண்டும் கூடும். (ம)

## ஜே. ஆர். தலைமையை ஏற்றுக்கொள்கிறார்கள்

### பொத்துவில் எம். பி. பேச்சு

பொத்துவில் தொகுதி தேசிய அரசு பேரவை உறுப்பினர் திரு. கனகரத்தினம் நேற்று பட்ஜட் விவாதத்தில் பேசுகையில், 'போக்குவரத்து அமைச்சர் ஜனுப் மொகமட் கிழக்கு மாகாணத்துக்கு வந்த போது, அங்குள்ள முஸ்லிம் மக்கள் அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர்' என்று கூறினார்.

'கிழக்கு மாகாண மக்கள், பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையை ஏற்றுக் கொள்கின்றார்கள். தமிழர் பிரச்னைகளைத் துரிதமாகத் தீர்த்து வைக்க அரசாங்கம் சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும். இதற்காக சகல ஒத்துழைப்புகளையும் வழங்க நாம் தயார்' என்றும் திரு. கனகரத்தினம் குறிப்பிட்டார்.

### இராசதுரை வரவில்லை

தமிழர் கூட்டணி எம் பிக்களைப் பொறுத்தவரை, மட்டக்களப்புமுதலாவது எம் பி. திரு செ இராசதுரை நேற்று பேரவைக்குச் சமுகமளிக்கவில்லை. நுவரெலியா மஸ்கெலியா எம் பி திரு. எஸ் தொண்டமான் வெளிநாடு சென்று விட்டார். (ம)

# அரசைக் கவிழ்க்க சதி முயற்சி?

(கொழும்பு)

அரசாங்கத்தைக் கவிழ்க்க சில சக்திகள் சதி செய்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று கைத்தொழில் அமைச்சர் திரு. ஜி. சிறில் மத்யூ நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்வார்.

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சில சதித்திட்டங்களை மேற்கொள்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன' என்றும் அமைச்சர் கூறினார்.

பொலிஸாரால் தேடப்பட்ட

# ஓட்டுமடம் வாலிபர் முல்லைத்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் கலவரத்தின் போது ஓட்டுமடச் சந்தியில் பொலிஸாரை நோக்கிச் சுட்டதாகச் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேஷ துப்புதலக்கும் பிரிவு இன்ஸ்பெக்டர் ஆர் பத்மநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இவரைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபரான ஓட்டுமடத்தைச் சேர்ந்த நாகன் தங்கராசா என்ற இளைஞரைப் பொலிஸ் கோஷ்டியினர் முல்லைத்தீவில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபருக்கு அராலி கூட்டுறவுச் சங்கக்கொள்ளைகள், மானிப்பாய்க் கொள்ளை ஆகியவற்றிலும் தொடர்பிருப்பதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அடையாள அணிவகுப்புக்காக சந்தேகநபர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (க-அ)

# தமிழர் கூட்டணி உடன் நடவடிக்கை எடுத்தது!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறியுள்ள பொத்துவில் தொகுதி தே. அ. பேரவை உறுப்பினர் திரு. எம். கனகரத்தினம்மீது கூட்டணியின் தலைமைப்பீடம் நேற்று உடனடியாக நடவடிக்கை எடுத்தது!

இதுபற்றி த. வி. கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு 'ஈழநாடு'க்குத் தெரிவிக்கையில், கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறி, கூட்டணிக்கு எதிராகச் செயல் பட்டிருக்கும் திரு. எம் கனகரத்தினம் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று கூறினார்.

'கட்டுப்பாட்டை மீறியதால் அவர் கூட்டணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். இதனுடன் அவரது செயலுக்கு விளக்கம் தருமாறு கோரப்பட்டுள்ளது. கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறி பாராளுமன்றக்குழுவின் நடவடிக்கை

(6-ம்பக்கம் பார்க்க)

# "சிறிமாவின் தவறுகளை மன்னிக்கமுடியாது!"

—பிரேமதாசா

(கொழும்பு)

"முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் சொந்தத் தவறுகளை மன்னிக்கலாம். ஆனால் அவர் நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கும் இழைத்த துரோகங்களை என்றுமே மன்னிக்கமுடியாது."

இவ்வாறு உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதன் தலைவியின் சொந்தக் கட்டுப்பாட்டுக்குக் கீழியங்கி

(6-ம் பக்கம் பார்க்க)

பேரவையில் அமிர்தலிங்கமும் பிரதமரும்

# 'சகல உரிமைகளும் வழங்கப்படுமா?' 'தரமாட்டேன் என்றுநினைக்கிறீர்களா?'

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் நேற்று, பட்ஜட் விவாதத்திற்குப் பதிலளித்த நிதி, திட்டமிடல் அமைச்சர், நேர்மையான தலைமையிலும் சரியான பாதையிலும் அரசுசெல்கிறதென்று குறிப்பிட்டு; கறுப்புச் சந்தைக்காரர்களும், முதலாளி வர்க்கத்தினரும், சுவிஸ் வங்கியில் கணக்குகள் வைத்திருப்போரும், வேலைநிறுத்தத்தை நாட்டில் தூண்டிவிடக்கூடியவர்களுமே 'பட்ஜட்'டை எதிர்க்கின்றார்கள் என்று குற்றஞ் சுமத்தினார்.

"முன்னாள் பிரதமரைத் தெரிந்தவர்கள்தான் சுவிஸ் வங்கியில் கணக்குகள் வைத்திருக்கின்றார்கள்.

இந்த வங்கியிலுள்ள கணக்குவிபரங்கள் தேவைப்படும்பட்சத்தில் இச்சபையில் சமர்ப்பிக்கப்படுமென்றும் நிதியமைச்சர் கூறினார்.

தமிழ் மாணவர்களின்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் மணியன்

(யாழ்ப்பாணம்)

[illegible] முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தமிழக பிரபல எழுத்தாளர் மணியன், இன்று காலை கொழும்பு திரும்புகிறார்.

நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பல நண்பர்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

'ஈழநாடு' அலுவலகத்துக்கும் திரு. மணியன் விஜயம் செய்தார்

# தேவை

1000 ருத்தல் பெரிய நண்டும்
800 ருத்தல் அறுக்குளா மீனும்
தேவை

வர்த்தக முகாமையாளருடன் தொடர்புகொள்க
சீநோர்
குருநகர்
யாழ்ப்பாணம்.

7815

# தேவை

## களஞ்சியப்பொறுப்பாளர்-தரம் II
(நிரந்தரமானது)

**சம்பளம்:**

ரூபா 250—400
10X10, 12.50X4

**தகைமைகள்:**

6 பாடங்களில் ஒரே தடவையில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண)ச்சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றில் பெற்றுள்ள 3 வருடகால அனுபவமும்.

**வயது:**

25க்கும் 45க்குமிடையில் இருத்தல்வேண்டும்.

**பிணை:**

உரொக்கப்பிணை ரூபா 3000/-
ஆதனப்பிணை ரூபா 10,000/-

விண்ணப்பங்கள் பதிவுத்தபால்மூலம் ''தலைவர், வடமாகாணம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், 25, முன்வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கு 15-12-77 திகதி அன்றோ அல்லது இதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். 7798

## கோட்டு விற்பனை விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. ஈடு 14423

1. தம்பிப்பிள்ளை ராஜரெட்ணம்
கைம்பெண் நாகேஸ்வரிதேவி
88/4, கோவில்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
—வழக்காளி

எதிராக

2. கந்தையா நவரெட்ணமும்
மனைவி தனலட்சுமி இருவரும்
167/9, கோவில்வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழ. இல. M. B. 14423-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ந் திகதி (27-12-77) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 8750/ம் 16-6-74 தொடக்கம் 3-7-75 வரைக்கும் ரூபாய் 5000/-க்கும் 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டால் வரி விதிக்கப்பட்ட கோட்டுச்செலவு ரூபாய் 688 சதம் 10 அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய் 443 சதம் 70 வெலியாத்துச் செலவு ரூபாய் 119 சதம் 45 இனிமேல்ஏற்படும் செலவு ரூபாய் 124 சதம் 95.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பிரிவு நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை ''மூளிச்சந்தன் வெளியும்'' ''புண்ணையடியும்'' பர. நில. இலா. 2½. D 295/26ல் பதியப்பட்டது. இதில் மேற்குப்பக்கமாகவும், வடக்குப் பக்கமாகவும் நிந்தமாக பர. நில. இலா. 2 விற்கப்பட்டது. மிகுதி நில. பர. ½ மூளிச்சந்தன் வெளியும் புண்ணையடியும்'' பர. நில. 2½ D 283/170ல் பதியப்பட்டது. இதில் மேற்குப்பக்கமாக நில. பர. ½ இந்த இரண்டு துண்டுக்காணிகளும் இப்போ நில. பர. ஒன்று கொண்ட ஒரு துண்டுக் காணியாக இருக்கின்றது. இந்த நிந்தமான பர. நில. இலா. கொண்ட ஒரு துண்டுக்காணியும் செய்பயிர் வான்பயிர்களும் புதிதாகக்கட்டப்பட்ட கல்வீடும், கிணறும் இன்னும் மற்றும் சகல புரோசனங்களும், எல்லை: கிழக்கு வல்லிபுரம் கணேசன், பெண் கமலாதேவிக்குரிய மிகுதிக்காணி. வடக்கு ஆறுமுகம் செல்லையா பெண் கனகரஞ்சிதத்திற்குரிய ஆதனம். மேற்கு ஆறுமுகம் செல்லையா பெண் கனகரஞ்சிதத்துக்குரியதாயிருந்து தற்போது தருமலிங்கம் அருணாசலத்துக்கும் பெண் புஷ்பவதிக்குமுரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும் இக்காணியின் மேற்கெல்லைக்காணியின் மேற்குப்பக்கமாக இருக்கும் காணியின் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் உள்ள முழுப்பங்கும் அதற்குரிய வழிவாய்க்காலும், குறித்த நில. பர. இலா. ஒன்றும் உத்தரவுபெற்ற உலாந்தா த. சின்னத்துரை அவர்களால் 6-9-67ல் 1824ம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தில் Lot (லொட்) 3ம் துண்டாகக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஏ ப பி எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

107, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் 1-9-77

7808

மண்டைதீவுக் கொலைமுயற்சி வழக்கு:

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கொலைமுயற்சி வழக்கில், விசாரணை நடுவில், சாட்சிய முரண்பாட்டினால் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

மண்டைதீவில் 75ம் ஆண்டு ஜூலை 18ம் தேதி தம்பு இலட்சுமி காந்தன், நல்லையா ஜப குலசிங்கம் அல்லது யாதவன் ஆகியோர் செபஸ்தி ஞானப்பிரகாசத்தைச் சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகளான ரி.சோமசுந்தரம், கே. பி. எஸ். வரதராசா, எஸ். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசுதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் எதிரிகள் நிரபராதிகள் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து, நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார். (க-அ)

## விஷமிகளால் இவர்களுக்கு தொல்லை

[நெல்லியடி]

கிளிநொச்சிப்பகுதியில் 7ம் வாய்க்காலில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்று அடுத்தடுத்து மூன்று தடவைகள் சில விஷமிகளால் தீயிடப்பட்டுள்ளதாம்.

இதனால் இப்பகுதியில் கள் அருந்துவோர் பெரும் சிரமத்துடன் தூரஇடங்களில் உள்ள தவறணைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம். (உ)

## 5 வது சர்வதேச திரைப்பட விழா

தாஷ்காந்த், டிச. 1

ஐந்தாவது சர்வதேச திரைப்பட விழா அடுத்த ஆண்டு மாதத்தில் உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரான தாஷ்கந்தில் நடைபெறவுள்ளது.

இந்த திரைப்படவிழா மே 23 முதல் ஜூன் 1ந் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பல ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் பங்கு பற்ற உள்ளன. (இ)

பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம் பளை

## கேள்வி விளம்பரம்

இச் சங்கத்தில் 5000க்கு அதிகமான சாக்குகளும் பாவித்த லொறி ரயர்கள் எட்டும் (நல்ல நிலையில் உள்ளது) விற்பனைக்கு உள்ளது விபரங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். கேள்விப்பத்திர கட்டுப்பணம் ரூபா 100/- செலுத்த வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி
பல. நோ. கூ. சங்கம்,
பளை.

1-12-77

7804

## முறையீடு

(நெல்லியடி)

கிளிநொச்சி லோங்ஸ் நிறுவனத்திற்கு இதுவரை பணம் செலுத்தியும் தொலைபேசிச் சேவை வழங்கப்படவில்லை.

இதனால் இங்கு பயிற்சி பெறும் இளைஞர்கள் தமது தேவைகளுக்கு தொலைபேசி வசதியின்றி கஷ்டப்பட வேண்டி உள்ளதாம்.

இந்நிறுவனத்தின் அதிபர் வணே - பிதா - மதுரநாயகம் அடிகள் இதுபற்றி தபால் தந்தி அமைச்சர் திரு ஷெல்லடன் ஜெயசிங்காவிடம் முறையிட்டுள்ளார். (உ)

மல்லாகம்கிராமசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல்-1978

மல்லாகம் நீதிமன்றவீதியில் அமைந்திருக்கும் இச்சபையின் ஆட்டிறைச்சிக் கடையில் 01-01-1978 தொடக்கம் 31-12-1978 வரையிலான காலப்பகுதியில் ஆட்டிறைச்சி வியாபாரம் செய்வதற்கான குத்தகை கேள்விகள் 1977-12-14ந் திகதி புதன் கிழமை நண்பகல் 12-மணி வரையும் விசேடஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம், பிணைப் பணம் ரூ 100/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூ 10/-ம், செலுத்தி 13-12-77 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

க. மகாதேவா,
விசேடஆணையாளர்,
கிராமசபை,
மல்லாகம்.

கிராமசபை அலுவலகம்,
மல்லாகம்,
24 11-1977.

7805

## வரிவிளம்பரம்

### தேவை

நன்கு காய்ந்த எலுமிச்சம் பழக்கோது தேவை. தொடர்பு கொள்ளவும் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், த. பெ. இல. 77, யாழ்ப்பாணம். 7806

### விற்பனைக்கு

நீம் சுகாதார தூபம் வேம்பினின்றும் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நீம் சுகாதார தூபம் வீட்டிலுள்ள நுளம்பு, பூச்சி, புழு ஆகியவற்றை அற்புதமாக நீக்கி நறுமணம் கமழச் செய்கின்றது. ஓர் மில்க்வைற் தயாரிப்பு 7807

பிரபல பாடசாலைகள், பஸ் நிலையம் ஆகியவற்றிற்கு அண்மையில், மிட்டாய்க்கடை சந்திக்கும், ஈழநாடு காரியாலயத்திற்கும் இடையில் மானிப்பாய் வீதி புதுறோட்டில் 8½ பரப்பு காணி வான்பயிர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொழில் ஸ்தானம், கைத்தொழில் நிலையம் அமைக்க ஏற்றஇடம் விபரங்களுக்கு: மு. பாலசிங்கம், தலையாழி, கொக்குவில். 7809

### CLASSES

I. C M. A. (A & B) May 78 exam Chartered (Preliminary) commencing 3-11-77 Time 1-30 p. m. Jaffna Education Centre. 22, Ramiah Chettiar Lane, Hospital Rd, Jaffna. 7799

### பரிசு

கடந்த 27-11-77 அன்று ஈழத்தமிழ் மாணவர் மன்றத்தினரால் இழுக்கப்பட்ட சீட்டிழுப்பின் பரிசு இலக்கங்கள் வருமாறு:

1-வது இல 3068, 2-வது இல 0999, 3-வது இல 4583. 3 ஆறுதல் பரிசுகள்: 1 இல 1183, 2 இல 4403, 3 இல 9630.

பரிசுப் பொருட்களை, நேரடியாக வந்து பெற்றுச் செல்லவும்

தலைவர்
7801

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னையா சித்தானந்தன் உரும்பிராய்
பொன்னையா சிவானந்தன் உரும்பிராய்
தற்பொழுது இங்கிலாந்து தனதுதரணி
பொன்னையா சிறி நடராசாமூலம் உரும்பிராய்
வழக்காளி

இல. ஈடு 14923

எதிராக

தம்பிராசா இராசலிங்கம் கைம்பெண்
லெட்சுமிப்பிள்ளை கருவேலம்பன் கோண்டாவில்

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 14923-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆ மார்கழி மீ 27-ந் உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 8333/32 ம் 1975-6-26 தொடக்கம் 1976-8-24 வரைக்கும் ரூபாய் 5000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 535/34

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை ''கருவேம்பன்'' நிலப்பரப்பு 4 வடமேற்கே இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இவ்வாதனத்தில் புதிதாகக் கட்டப்படும் கல்வீடும் பயிர்வகைகளும் இந்தப் பரப்பு 4க்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சடையர் பெண் அன்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு கருணாகரி சின்னத்துரை பெண் சின்னமணிக்குமுரிய ஆதனம். தெற்கு ஆறு முழ அகலமுள்ள ஒழுங்கை இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.
கொமிஷனர் விலைமதிப்பாளர்

வேல்பதி
புத்தூர்
20-11-77

7812

# ஆந்திர சூருவளியின் போது கொந்தளித்த கடல் அலைகள் மத்தியில் ஒளிப்பிழம்பு!

ஹைதரபாத், டிச. 1

பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்ட ஆந்திர சூருவளியின்போது பயங்கரமாகக் கொந்தளித்த கடல் அலைகளின் மத்தியில் விபரித்துக்கூறமுடியாத பிரகாசமான ஒளிப்பிழம்பு தோன்றியதாக இதைநேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒளிப்பிழம்பின் சக்தியைக் கொண்டு மிகவும் சக்திமிக்க ஹைதரசன் குண்டுகளைத் தயாரிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒளிப்பிழம்பை நேரில்கண்டவர்களின் துணையுடன் விஞ்ஞானிகள் இப்போது ஆய்வுநடத்தி வருகின்றனர்.

சுமார் 18 அடி உயரத்திற்கு கொந்தளித்து எழுந்த அலைகளினூடே இந்த ஒளிப்பிழம்பு வெடிப்புகள் எதுவுமின்றி காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# புயல் வெள்ள அகதிகளுக்கு உதவுவது தேசியக் கடமையாகும்

## சென்னையில் பிரதமர் மொரார்ஜி

சென்னை, டிச. 1

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஆந்திரப் பிரதேச மிழ்நாட்டு மக்களுக்கு மறுவாழ்வளிப்பது ஒரு தேசியக் கடமையாகும். எனவே சகல இந்தியரும் இந் நிவாரணப் பணிகளுக்கு நிதிவழங்கவேண்டியது மிக அவசியம்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் சென்னையில் தெரிவித்தார்.

ஆந்திரப்பிரதேசத்திலும் தமிழ்நாட்டிலும் புயல் வெள்ளத்தின் கொடுமைகளை விமானமூலம் நேரில் பார்வையிட்டபின்னர் சென்னை தேசாய் திரு. மேற்கண்டவாறு கூறினார்.

நிவாரணப்பணிகளின் செலவைப்பற்றி அக்கறைகொள்ளாது பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று நாம் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும்திரு தேசாய் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உத்தியோகம் வழங்குவது அரசின் கடமை என்றும் திரு. தேசாய் கூறினார். (இ)

---

மத்திய கிழக்கு அமைதி:

# கெய்ரோ மகாநாடு டிச. 13-ல் ஆரம்பமாகும்

கெய்ரோ, டிச. 1

மத்தியகிழக்கு சமாதானம் குறித்து ஆராய எகிப்திய அதிபர் ஜனூப் அன்வர் சதாத்தினுல் கூட்டப்படவிருக்கும் மகாநாடு இம்மாதம் 13-ம் திகதி கெய்ரோவில் ஆரம்பமாகும் என்று கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை எகிப்திய அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளையில், எகிப்திய அதிபர் ஜனூப் அன்வர் சதாத்துக்கு எதிரான மகாநாடு ஒன்று இன்று லிபியத் தலைநகரான திரிப்பொலியில் ஆரம்பமாகியது.

இம்மகாநாட்டில் லிபியா, சிரியா, அல்ஜீரியா, தெற்கு யேமன்பாலஸ்தீன, விடுதலை இயக்கம் ஆகியவற்றுடன் ஈராக்கும் கலந்துகொள்கின்றன.

இம்மகாநாட்டுக்கு எதிராக ஈராக்கில் ஒரு மகாநாட்டைக் கூட்ட இருந்த ஈராக் அரசு இப்போது தமது முயற்சியைக் கைவிட்டுவிட்டு திரிப்பொலி மகாநாட்டில் கலந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளது.

# எந்த அமைதி முயற்சிக்கும் அமெரிக்கா ஆதரவளிக்கும்

## கார்ட்டர் அறிவிப்பு

ஜனூப் அன்வர் சதாத்தின் கெய்ரோ மகாநாட்டில் அமெரிக்காவின் சார்பில் அமெரிக்க துணை வெளிநாட்டமைச்சர் திரு. அல்பேர்ட் அண்டர்சன் கலந்துகொள்வார் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு அமைதி குறித்து மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுக்கும் அமெரிக்கா ஆதரவளிக்கத் தயாராக உள்ளது என்றும் திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

கெய்ரோ மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனூப் சதாத் விடுத்த அழைப்பை இதுவரை இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளும் ஐ.நாவுமே ஏற்றுக் கொண்டுள்ளன. (இ)

---

கருணாநிதியை விடுதலைசெய்யாவிடின்

# தமிழக அரசு பயங்கர விளைவுகளை சந்திக்கநேரிடும்

## வீரமணி எச்சரிக்கை

(சென்னை, டிச 1)

''சட்டப்புத்தகத்தைப்புரட்டிப் பாராதீர்கள். சரித்திரப் புத்தகத்தைப் புரட்டிப்பாருங்கள்; அதுதரும் பாடத்தை உணர்ந்து கடைப்பிடியுங்கள். சட்டத்தையும் அதிகாரத்தையும் அடக்குமுறையையும் நம்பி ஆட்சி நடத்தியவர்களின் சரித்திரம் நிலைத்ததில்லை' முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அரசியல் ஞானத்தைக் கேட்டு அரசியல் நடாத்துவதை விடுத்து தமிழ்நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பேரிழப்பை, மக்கள் பரிதவிப்பைக் கருத்தில் கொண்டு திராவிடமுன்னேற்றக்கழக தலைவரையும், பிரமுகர்களையும் விடுதலைசெய்து கட்சிபேதங்களை மறத்து கூடிச்செயலாற்ற வகைசெய்யுங்கள். இதைச் செய்யாமல் இருந்தால் பயங்கரமான விரும்பத்தகாத விளைவுகளைச் சந்திக்கநேரிடும்,''

இவ்வாறு திராவிடக்கழகச் செயலாளரும் அண்மையில் விடுதலைசெய்யப்பட்டவருமான திரு. கி. வீரமணி கூறினார்.

திரு கருணாநிதியையும் மற்றும் தி. மு. க. வினரையும் விடுதலைசெய்யுமாறு தமிழக அரசைக் கோரி சென்னையில் நடைபெற்ற கூட்டத்தின் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், திராவிடஇயக்கங்களின் இனஉணர்வை அழித்து ஒதுக்கி இருண்டகாலத்தை திருமதி காந்தியே ஏற்படுத்த முனைந்ததாலேயே நாம் ஜனநாயக மரபு வழிகளில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை நடாத்தவிளைந்தோம் என்றார்.

இப்போராட்டத்திற்காக காவல்துறை ஆணையாளரின் அனுமதியைப் பெற்றிருந்தோம். சட்டத்திற்கு அமைவாக இந்த போராட்டத்தை நடாத்தியபோது மாநில அரசு வஞ்சம்தீர்ப்பதற்காக அடக்குமுறைகளை பயன்படுத்தியது. இந்த அடக்குமுறைகளை எதிர்த்து விரைவில் போராட்டம் ஒன்று உருவாகும் என்றும் திரு, வீரமணி எச்சரிக்கைவிடுத்தார். (கெ-இ)

---

சஞ்சய் காந்தியின்

# கல்கத்தா விஜயத்திற்கு 1லட்சத்து 30 ஆயிரம்செலவு?

## மத்திய அரசு உத்தரவிட்டிருந்ததாம்

கல்கத்தா டிச. 1

முன்னாள் இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தி முன்னர் கல்கத்தா சென்றபோது அவரது பிரயாணச் செலவுகளுக்காக மேற்கு வங்காள அரசு 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவைச் செலவிட்டுள்ளதாம். மத்திய அரசின் உத்தரவின்பேரிலேயே இந்தச் செலவுகளை மாநில அரசு ஏற்றுக்கொண்டதாக மாநிலஅரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடிகால வரம்புமீறிய செயல்கள்பற்றிவிசாரணைசெய்வதற்காகமா நிலஅரசினுல் நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் இவ்விவகாரம் தொடர்பாகவும் விசாரணைசெய்யும்என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (இ)

# இந்திய- ஆஸி. முதல் டெஸ்ட்

மெல்போண், டிச. 1

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான முதலாவது கிரிக்கட்டெஸ்ட் நாளை வெள்ளிக்கிழமை மெல்போணில் ஆரம்பமாகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

வட இலங்கை விவசாயிகட்கோர் நற்செய்தி

★ செத்தல் மிளகாய் ★ வெங்காயம் ★ உருளைக்கிழங்கு ★ கடலை ★ பயறு வகை போன்ற உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொழும்பில் கூடிய விலையில் விற்றுக்கொடுப்பதற்கு

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

அரசன் கொம்பனி

72 ஏ, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 29407

[அளவெட்டியைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான சட்டத்தரணிதிரு மூ திரு நாவுக்கரசு தமது சொந்தக்கருத்தை இங்கு தெரிவிக்கிறார்.]

## மாவட்ட மந்திரி பதவியும் கூட்டணியும்

# மந்திரிப் பதவிகளை ஏற்பதே அரசியல் விவேகமாகும்

### கூட்டணிப் பிரமுகர் கூறுகிறார்

'தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள்மாவட்ட மந்திரிப்பதவியை ஏற்கலாமா, அல்லவா?' என்ற கேள்வியும் பதிலும் இன்று தமிழ்ஈழத்தின் நாலா பக்கத்திலும் ஒலித்தவண்ணமே இருக்கின்றன

இதற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் பலபல காரணங்களைக் கூறியும், இருதரப்பட்ட கருத்துக்களையும் ஒப்பிட்டு நோக்கினால் இன்றைய அரசியல், பொருளாதார, சமூகப்போக்கை நுணுக்கமாக ஆராய்ந்தால்– மாவட்ட மந்திரிப்பதவியினை ஏற்றே ஆகவேண்டும் என்ற கருத்தினை நடுநிலைநின்று ஆராயும் எவரும் ஏற்றே நிற்பர்.

தனிச்சிங்கள, ஏகபௌத்த, ஒற்றையாட்சி அரசு என்று வர்ணித்துவிட்டு அதேஅரசை சரிவரச் செயற்பட வைக்கும் நோக்கோடு, தமிழரது அபிலாஷைகளை அரசு அறிய, நாடறிய எடுத்துரைக்கஎதிர்க் கட்சிப்பதவி தக்கது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி அப்பதவியை ஏற்றுள்ளது. அத்தோடு தருணம் வரும் போதுஅப்பதவியையும் தூக்கி எறியத் தயங்க மாட்டாது எனத் தெளிவுபடுத்தியும் உள்ளது. இக்க நிலையைத் தமிழர் கூட்டணிஏற்றுக்கொண்டால் ஏன் அதே அடிப்படையில் மாவட்ட மந்திரிப்பதவியையும் ஏற்றுக்கொண்டு, ஏன் அதையும் தக்க தருணத்தில் தூக்கி எறியக்கூடாது?

தமிழ்ஈழம் தவிர்ந்த வேறு எதையும் ஏற்கமாட்டோம் எனக் காரணம் காட்டினால், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்டசபையையோ, மாகாணக் கவுன்சில்களையோ கூட ஏற்பது நியாயமாகுமா என்ற கேள்வியும் எழத்தான் செய்யும்.

அடுத்து மாவட்ட மந்திரிப் பதவி தமிழ்ஈழக்கொள்கைக்கு விரோதமானதா, அல்லது எமது இயக்கத்தை வலுவிழக்கச் செய்துவிடுமா என்ற கேள்வியும் எழத்தான் செய்யும். அரசுஒவ்வொருமாவட்டத்துக்கும் ஒதுக்கும் நிதியை எமது பிரதிநிதி சரிவரக்கையாண்டு, அதிமுக்கிய தேவைகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்ஈழத்தின் நல்வாழ்விற்கு ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? இப்படியாக நம் தமிழ்ஈழம்வேண்டாப் பெண்டிராக இராது ஏன் எமது மாவட்ட அமைச்சரது அரவணைப்பில் திட்டமிட்டு முன்னேறக் கூடாது. தமிழ் ஈழ இலட்சியத்தை நோக்கி வீறுநடைபோடும் நம் தமிழ்மண்ணின் தெருக்கள், வீடமைப்புக்கள், வடிகால்கள், பாடசாலைகள், பூங்காக்கள், பொது இடங்கள், ஏன் நம் தமிழ் ஈழ மாவட்ட அமைச்சரின் நேரடிக்கவனத்தில் உயர்வுபெறக்கூடாது?

இத்தகைய பதவியை கூட்டணியினர் ஏற்காத பட்சத்தில் கட்டாயம்ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவர் ஒருவர் ஏற்றே ஆகவேண்டியிருக்கும். அப்படி அவர் ஏற்றால் அதுமிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உறுதி. மாவட்ட மந்திரிப் பதவிகளை ஏற்பதால் விளையும் நன்மைகளை விட ஏற்காது விடுவதால் விளையக்கூடிய தீமைகளோ அநேகம் எனலாம்.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் தேவையே மகேஸ்வரன் தேவையாகக் கணிக்கப்படுகின்றது. எனவே இலட்சியப் பயணத்தில் நின்று காவாற இடமேது என்ற வரட்டுச்சித்தாந்தத்திற்கு இடமேது? ஒரு ஆட்சிமன்ற உறுப்பினரதுவீட்டில் அரைமணி நேரம் தங்கி நின்றால் எத்தனையோ விண்ணப்பங்களைக் காணலாம். தெருவுக்குத் தார் ஊற்ற வேண்டுமென்பார் ஒருதொண்டர். கல்லூரிக்கூரைகாற்றோடு போனதென்பார் ஒரு கல்விமான். அநாதைஇல்லம் ஒன்று அத்தியாவசியம் என்பார் பிறிதொரு தொண்டன். குளத்தை ஆழத்தோண்டி நீரைத்தேக்க வேண்டுமென்பான் ஏதுமறியாத விவசாயி. இத்தனையையும் கேட்டுவிட்டு, 'இதற்கு நான் யார்? மாவட்டமந்திரியைப் போய்ப்பாரும். நான் இலட்சியப்பயணத்தில் போகிறேன்' என்றால் வருகைதந்த பேர்வழிகள் 'ஐயா, உம்மை எதற்குத் தேர்ந்தெடுத்தோம்? அடுத்தமுறை வாரும் உம்மையும் உமது இலட்சியத்தையும் காட்டுகிறோம்'' என்பர்.

இப்படி ஒரு நிலை உருவாகக் கூடாது என உணர்ந்த கூட்டணித் தலைமைப்பீடம் மாவட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மந்திரிகளைக்காணலாம் என்றும்தீர்மானித்துவிட்டது. ஆகவே மாவட்ட மந்திரிப்பதவியையும் ஏற்காது விட்டால் இன்று கிழக்கிலங்கையில் அரசின் ஆதரவை நாடி பாராளுமன்ற உறுப்பினரும், மற்றையோரும் தமிழ் அமைச்சரைப் பேட்டிகண்டு விருந்து நல்கி கட்சியல்ல முக்கியம் என் தொகுதியே முக்கியம் எனப் பேச முற்பட்டு கூட்டணியின் பலத்தைக் கூறுபோட முற்படுவது போல், நாளை வடக்கிலும் பல தமிழ்ப்பிரதிநிதிகள் மாவட்ட அமைச்சர்களை இரவில் கண்டுவிட்டு பகலில் கூட்டணி மேடையில் கொள்கை விளக்கமும் செய்யலாம்.

இளைஞர்களைக்கண்டு– அவர்கள் துடிப்பான மனப்போக்கைக்கண்டு தலைமைப்பீடம் தயங்கக்கூடாது. நல்லது எது துரோகம் எது என்பது தம்பியருக்கு நன்கு தெரியும். ஆதலால் நல்லதைச் செய்ய அவர்கள் ஒருபோதும் குறுக்கே நிற்க மாட்டார்கள். கொள்கையில் உறுதி கொண்டவனை எவரும் ஏமாற்றமுடியாது.

### ஒருடாக்டரின் கருத்து

யாழ் நகரில் தனியார் வைத்திய நிறுவனம் ஒன்றின் அதிபர் டாக்டர் எஸ். எஸ். சேனாதிராசா கூறியதாவது: எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு எப்படி மாவட்ட மந்திரியாக இருக்கவும் முடியும்? பாராளுமன்றத்தில், அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்தபின் எப்படி மாவட்ட மந்திரிப் பதவிகளை ஏற்று அரசின் கொள்கைகளை அமுல் செய்வது? இது ஒருகொள்கையும் ஆகாது.

அப்படியானால் எதிர்க்கட்சியில்லாமல், கூட்டணியினர், அரசாங்கக் கட்சியில் சேரவேண்டும். இப்படிச்செய்து மந்திரிசபையில் ஒரு மந்திரி பதவி எடுத்தால், எமது தொகுதிக்கு ஏதும் நன்மை செய்யலாம். ஆனால் கூட்டணியினருக்குத் தமிழ் மக்களின் கட்டளை தமிழ்ஈழம் காண்பதேயாகும். இதனை எவ்வளவு கெதியில் காணமுடியுமோ அவ்வளவு நல்லது.

கூட்டணியினருக்கு இன்னும் இரண்டு மூன்று வருடங்களில். தமிழ் ஈழம் காணமுடியாதென்றால், அவர்கள் ராஜினாமா செய்து தமிழ்மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

30 வருடகாலமாக கொழும்புவாழ்தமிழ்த்தலைவர்களை நம்பி ஏமாந்துபோனோம் இப்போது நம் உள்ளூர்த் தலைவர்கள், எம். பி யாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் மனநிலை நன்கு தெரியும். கொழும்புத் தலைவர்களைப்போல் சிங்கள தலைவர்களின் நட்புக்காக தமிழர்களின் வாழ்வை இரண்டாம் தரத்தில் வைக்கமாட்டார்கள்.

எங்கள் மக்களின் அறிவும், கல்விஞானமும், இங்குமன் நாம் தமிழ் ஈழம் காணவேண்டும். இன்னும் 20வருடம் போனால், எம்மில் கற்றவர்கள் குறைந்துவிடுவார்கள்.

இன்னும் 30 வருடங்கள் போனாலும் தமிழ் ஈழம் பகற்கனவாகவே போய்விடும்.

மாவட்ட மந்திரி பதவிகளைக் கொடுத்துத் தமிழர்களின் சுதந்திரதாகத்தையும், உணர்ச்சியையும், குறைத்து அவர்களின் இடதம்பிக்கையைக் குறைக்கப்பார்க்கிறார்கள் இதற்காகச் சில கரகர்களும் செயல்பட்டுவருகின்றார்கள். தமிழ் மக்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். [அ]

---

## பொலிஸ் நிலையக்கொலை வழக்கு

# சம்பவ இடத்தை கோர்ட்டார் பார்வையிட்டனர்!

[குருநாகல்]

பொலநறுவ பொலிஸ் நிலைய கொலைவழக்கில், குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி ஜூரிசபையினர், அரசதரப்பு எதிரிதரப்பு சட்டத்தரணிகள், எதிரிகள் சம்பவம் நடந்த இடத்தையும், அதற்குத் தொடர்பான இடங்களையும் பார்வையிட்டனர்.

இவ்விசாரணை குருநாகல் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்டின் அபயவர்த்தன முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கில் 76ம் ஆண்டு, மே மாதம் 11ம் தேதி பொலநறுவ அனுத்வவீர என்ற இடத்தில், டொடன்மாட்டின் றணசிங்காவை கொலைசெய்ததாக, பொலநறுவ பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சப்இன்ஸ் பெக்டர் ஜயம்பதி ராஜபக்ச, பொலிஸ்சார்ஜண்ட் கே கிரிபண்டா, கான்ஸ்டபிள் கே.ஏ. பத்து சேன, பொலிஸ் ஜீப் சாரதி கே. கருணாதிலகா ஆகிய நால்வர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணிகளான தயா பெரேரா திலாங்க விக்கிரமசிங்கா, டென்சில் குணவர்த்தன, ஜி. பி சேனநாயக்கா ஆகியோர் ஆஜரானார்கள்.

அரசதரப்பில் பதில் வழக்கு தொடுநர் சட்டத்தரணி எஸ். சிவராசா, அரச சட்டத்தரணி மோசேஸ் ஆகியோர் ஆஜரானார்கள். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

[நெல்லியடி]

கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரம் நோக்கிச் சென்ற பஸ்ஸில் பிரயாணம் செய்த ஒருசிறுமியின் தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற ஒருவாலிபரை சக பிரயாணிகள் கையும் மெய்யுமாக பிடித்து கிளிநொச்சி பொலிசில் ஒப்படைத்தார்கள்

பொலிஸ் விசாரணையில் அவ்விளைஞன் அன்று வேறொரிடம் பிக்பொக்கட் அடித்த தகவலும் தெரிய வந்தது அப்பணமும் கைப்பற்றப்பட்டது.

---

## சிறுவன் படுகாயம்

[நெல்லியடி]

யாழ். கண்டிவீதியில் மிக வேகமாக வந்ததாகக் கூறப் படும் காரொன்று யாழில் வைத்து 12 வயது சிறுவன் ஒருவரை மோதிக்காயப்படுத்தியது.

சிறுவன் படுகாயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் கார்ச் சாரதியும் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள். (உ)

---


∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

# வைத்திலிங்கம்ஸ்

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்புவியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி: 33143 — 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


---

## பதவி வெற்றிடங்கள்

**பருத்தித்துறைகடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கம்**

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மேற்படி சங்கத்தால் கோரப்படுகின்றது.

**1. பொது இலிகிதர் தரம் II**

**தகைமைகள்:**

(அ) 6 பாடங்களுடன்கூடிய க.பொ. த.ப.(சாதாரணம்), 2 வருடகால அனுபவமும்; அல்லது

(ஆ) க.பொ. த. ப. (சாதாரணம்) 6 பாடங்கள், இவற்றுள் இரண்டுபாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம் அல்லது பொருளாதாரவியலாக இருத்தல்வேண்டும்; அல்லது

(இ) பொதுஎழுதுநர் பதவியின் தரம் III இல் இரண்டு வருடகால அனுபவம்.

வயது: 20—35

வேதனம்: 200—340 / 8X10, 10X6

**2. காரியாலய சேவகர் தரம் I**

**தகைமைகள்:**

(அ) 8ஆந்தரக் கல்வித்தகைமையும்

(ஆ) நல்ல உடனலமும், அனுபவமும்

வயது: 20—43

வேதனம்: 150—212 / 5X10, 6X2

விண்ணப்பங்கள் யாவும் 77-12-17 நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் பொதுமுகாமையாளர், பருத்தித்துறை க. தொ. கூ. சங்கம், தும்பளைவீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம்அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்களின்மூலப் பிரதிகளுடன் 77-12-22 காலை 8-30க்கு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். நேர்முகப்பரீட்சைக்குத் தனித்தனி அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டாது.

**பிணைப்பணம்:**

இயக்குனர்சபையின் தீர்மானப்படி செலுத்தத்தயாராக இருத்தல்வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

மேற்படி சங்க அமைய ஊழியர்களின் விண்ணப்பங்களுக்கு, விசேட முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

பொதுமுகாமையாளர்
பருத்தித்துறை க. தொ. கூ. சங்கம்
தும்பளை வீதி, பருத்தித்துறை.
1977-12-02

7803

**Regal** (Jaffna)
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
MAXIMILIAN SCHELL...DIANE BAKER
in
**"Karakatoa East of Java"**
Cinerama wide screen 70 m. m. [Techni color]

**ராணி** (யாழ்ப்பாணம்)
கடைசி 3 தினங்கள்
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**RIO** (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.
**THE RAILWAY CHILDREN**
(Wonderful Family Entertainment)
Special school shows at 1-30 P. M. by prior arrangement.

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
**தாயைக் காத்த தனயன்**
(புதிய பிரதி)

8-வது ஜனத்திரள் வாரம்!
**ராஜா** யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
**தசாவதாரம்**
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

**மனோஹரா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**லிடோ** (யாழ். நகர்) எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்: 7693
**நீதிக்கு தலைவணங்கு**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
**மூன்று முடிச்சு**
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.


"பூமியிலே நன்மன தோர்க்கு சமாதானம் உண்டாவதாக" என்பது கிறிஸ்துவின் வாக்கு உண்மையிலேயே உள்ளத்தில் நன்மனதுடைய கிறிஸ்தவனாகிய திரு.மு ஆசீர்வாதம் சமாதான நீதவனாக நியமிக்கப்பட்டபோது பொருத்தமுடையவர்க்கே பதவி கொடுக்கப்பட்டது எனபலரும் மகிழ்ந்தனர் அன்னாரும் பலவருடங்களாகப் பலரும் பாராட்டக் கூடிய முறையில் இப்பதவியை வகித்து வருகையில் சென்ற மாதம் 2ம் திகதி காலன் மனம் பொறுக்காமல் அவரை எம்மிடமிருந்து பிரித்துச்சென்று விட்டான்.

சாதாரண ஆசிரியராகப் பதவி ஏற்ற ஆசீர்வாதம் பயிற்சிபெற்ற ஆசிரியராகி இருபது வருட சேவையின்பின் ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற

## கல்விக்கும் கலைக்கும் அருந்தொண்டாற்றிய 'ஆசீர்'

பின்பு தாம்கற்ற கல்விப்பயனை இவ்வையகமும் பெறுமாறு பலதரப்பட்ட நூல்களை எழுதிப் பல்கலைப் புலவரானார்.

ஆசிரிய சேவைக்காலத்தில் இவர் எழுதிய படிமுறைக் கணிதம் படியாத மாணவர் இடையாது. இதைப்போலவே படிப்படியாக கணிதம், கவிதை வேதம், சோதிடம், காதல் உறவு போன்ற விடயங்களில் பல நூல்களை எழுயதுடன் விவேகி என்னும் சஞ்சிகையும் நடாத்திவந்தார். பதிப்பு பிரச்சினை காரணமாக கண்டி வீதியில் ஆசீர்வாதம் அச்சகத்தை நிறுவினார். இதில் தமிழ் ஆங்கில சிங்கள சமஸ்கிருத மொழிகளில் அச்சுப் பதிக்க வழிவகுத்தார்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கலையாகிய நாட்டுக் கூத்தினுக்கு புத்துயிர் ஊட்டிய புலவராக ஆசீர்வாதம் அவர்கள் காணப்படுகின்றார். ஏட்டுப்பிரதிகளாய் இருந்த மரியதாசன், தேவசகாயம் பிள்ளை, விஜயமனோகரன் போன்ற பல நாட்டுக்கூத்து பிரதிகளை அச்சுவாகன மேற்றி புதுமைசெய்த இவர் என்ற பெருமை கலையுலகில் இவருக்கு உண்டு இவர் தமது கலை உள்ளத்தின் வெளிப்பாடாக "மனம் போல மாங்கல்யம்" என்ற நாட்டுக்கூத்தை எழுதினார்.

ஆசீர்வாதம் அச்சகம் ஆசீர்வாதம் ஸ்ரோஸ் இவற்றின் அதிபராய் திரு. ஆசீர்வாதம்



எப்படி வளர்கினார் என் பதை பிரேத ஊர்வலத்தில் ஊழியர்கள் எடுத்துக் கொண்ட பங்கும் கடைசி மரியாதையின் போது அவர்கள் அழுது புலம்பிச் சிந்திய கண்ணீர் வெள்ளமும் எடுத்துக்காட்டியது.

இவர் செய்த தானதருமத்தை எவரும் அறியாதிருந்த போதிலும் மரணத்தின் பின் ஆற்றுத்துயர் அடைந்த உதவிபெற்றோர் இவ் உதவிகளைச் சொல்லி அழுது வெளிப்படுத்தினர்.

இறைவன் இவரின் ஆத்மாவிற்கு சாந்தியையும் இவரின் பிரிவால் துயருறும் மனைவி மக்கள் மனஆறுதலையும் கொடுப்பாராக.

— குணம் மரியதாஸ்

## விவேகானந்த சபைப் பரீட்சைகள் ஞாயிறு நடக்கும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விவேகானந்தா சபையின் வருடாந்த சைவ சமயபாடப் பரீட்சைகள் எதிர் வரும்ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் இப்பரீட்சைகள் அக்டோபர் மாதத்தில் நடைபெறுவது வழக்கம். எனினும் காலநிலை சீராக இல்லாமையாய் இப்பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ)

## இந்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியக் கோஷ்டிக்கு பிஷன் சிங் பேடியும் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கு மொபி சிம்ஸனும் தலைமைதாங்குகிறார்கள்.

இந்த டெஸ்டின் நேர்முக வர்ணனையை இந்தியவானொலி காலை 6-25 மணிமுதல் பகல் 1-35 வரை ஒலிபரப்புச்செய்யும்.

(இ)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜீ. ஆர். -ஜெயலலிதா
**அன்னமிட்ட கை**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
ரவிச்சந்திரன் — லதா
**வீட்டுக்குவந்த மருமகள்**

4-ந் திகதி வரை
**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**


## யாழ். ஆயுர் கல்லூரி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் நடப்புவருடப் பரீட்சை முடிவுகள் பின்வருமாறு:-

### சித்தியெய்தியவர்கள் — முதலாம் வருடம்:

பிரான்சிஸ் பிரகாசம், எஸ் ஞானேந்திரன், சி ஜெசிந்தா, சி சந்திரபிரபா, ச மனோகரி, த் கௌரி, சு சிவபாக்கியம், அ பெணிசிற்றஸ் செபெல்லா, சா புஸ்பராணி, சு பிரேமகுமார், இ பாலாம்பிகை, ஆர் கலைவாணி, என் இந்துமதி, சி உமா, வி தாமோதரம்பிள்ளை, பி சரஸ்வதிதேவி, க முருகையா, கே ஜோதிலட்சுமி, எஸ் நிர்மலாதேவி, எஸ் பொற்கலை, க அமிர்தகௌரி.

### ஞானசித்தி

சி பரராசசிங்கம், மா சி காமசுந்தரி, ந சிவசுப்பிரமணியம், சு சிவராமலிங்கம், சித்தி நஜிலினா, த தயாநிதி, நா மகேஸ்வரன், க பத்மநாதன், க மேரி திரேசா, என் சபேசன், என் சச்சிதானந்தம், ஏ டொமினிக்.

### சித்தியடைந்தவர்கள் — இரண்டாம் வருடம்:

கே ஸ்ரீதேவி, ஆர் இரத்தினேஸ்வரி, வி அருந்ததி, கே தயாநிதி, ரி பர்வதாயபாள், எஸ் சரஸ்வதி, ஏ சகாயநாதன், எம் ஐ எச் முகமது அஸ்றப், ஏ மாணிக்கவாசகர், இ ஜெயராமலிங்கம், எம் பரமானந்தம், சி செந்தில்நேசன், ஏ கே ஈ இளங்கோ, க உருத்திரசேனன், ஏ வேலாயுதம், எம் பெலித்தாராணி, ஏ. எம் ஜீ யோகேந்திரராணி, ரி தாரணி, எஸ் இராஜபூபதி, ரி சிவசுப்பிரமணியம், எம் என் யோகநாதன், என் சரஸ்வதி, எஸ் அமிர்தலிங்கம், கே சரோஜினிதேவி.

### சித்தியடைந்தவர்கள் — மூன்றும் வருடம்:

பொ திலகவதி, ச தவசீலன், இ கலாதேவி, சோ மேரிசுசீலா, சோ குலமணி, செ விஜயகுமாரி, ச இராஜலட்சுமி, ஐ மாலினி, வ சிவாஜி, சி அம்பலவாணர், இ இலங்கநாயகி, சி மீனலோஜினி க அருள்ஜோதி, சி இந்திராணி, அ சுந்தரலிங்கம், க இந்திராணி.

(அ)

## இன்று ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

கல்வி, கலை, கலாச்சாரக் காலப்புக்கழகத்தின் தலைவர் சட்டத்தரணி த சோமசுந்தரமும் பொதுச்செயலாளர் ஓவியர் ச. பெனடிக்கும் மேற்கொள்ளவிருக்கும் உலகத் தமிழ்க்கலை தூது சம்பந்தமாக ஆலோசிக்குமுகமாக இன்று மாலை நல்லை ஞானசம்பந்தர் ஆதினமண்டபத்தில் ஒரு கூட்டம்நடைபெறவிருக்கிறது

செல்லவிருக்கும் நாடுகள் கழகச் செயலகத்திற்கான கால்கோள்விழா வாழ்த்து மலர் முதலான விஷயங்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

உலக சுற்றுப்பயணத்திற்கு முன்னதாக ஓவியர்பெனடிக்ற் இம்மாதம் 7-ம் திகதி இந்தியா செல்லவிருக்கிறார். அடையாறு ராஜாசர் முத்தையா செட்டியார் உயர் நிலைப்பள்ளியில் ஓவியர் பெனடிகற் ஓயக்கலைபற்றிச் சொற்பொழிவாற்றுவார். (அ)

## இலவசம்

பால்மாடு வளர்ப்பவர்களுக்கு நல்ல இன புல் நாற்றுக்களை யாழ்ப்பாணம் 'மில்க் வைற்' ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகிறார்கள். தேவையானோர் தங்களோடு உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

(அ)


**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — ஜெயலலிதா (இருவேடங்கள்)
**வந்தாளே மகராசி**
(புத்தம் புதிய பிரதி)

### மணிவாக்கு

தனது தாய்ப்பாஷையைச் சிறுமைப்படுத்துவது தன் தாயைத்தூற்றுவதற்குச் சமனாகும்.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

# கல்விச் சீர்திருத்தம்

கல்வி முறையில் மிகப் பெரும் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான திட்டங்கள் தயாரிக்கப் பட்டுவருகின்றன.

கடந்த ஏழு வருடங்களாக ஆட்சியிலிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி - சுதந்திரக்கட்சி அரசாங்கம் கல்வித்துறையில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.

இதற்கு முன்னரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 1960ம் ஆண்டு முதல் 1964ம் ஆண்டு வரை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தது.

அந்தச் சமயத்திலும் கல்வித்துறையில் மாற்றம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன; சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அந்நிய ஆட்சியினரின் கல்வி முறையையே நமது நாடு கடைப்பிடித்துவருவதால் நமது நாடு ''குமாஸ்தாக்களை உற்பத்திசெய்யும்' இயந்திரமாக இயங்கிருவதாகவும், இதை மாற்றி அமைப்பதற்காகவே புதிய கல்வித் திட்டம் கொண்டு வரப்படுவதாகவும், முன்னைய அரசாங்கம் அறிவித்தது.

அந்நிய மொழியான ஆங்கிலம் தேவையில்லை என்றும், இந்நாட்டின் தேசிய மொழிகளில் கல்வி கற்றல் போதுமென்றும் தெரிவித்துச் சிங்களமும் தமிழுமே போதனா மொழிகளாக்கப் பட்டன.

வெளி நாடுகளில் சென்று கல்வி கற்பதற்கான வசதிகள்கூட மறுக்கப்பட்டன.

ஆனாலும் வசதியும், வாய்ப்பும், செல்வாக்கும் உள்ளவர்கள் வெளி நாடு சென்று கல்வி பெறுவதற்கு வாய்ப்பிருந்தது.

படித்துவிட்டுச் சும்மா இராமல், தொழில் வாய்ப்புக் கிடைக்கக்கூடியதாகக் கல்வித்திட்டம் வகுத்துள்ளதாகவும், அதைச் செயல்படுத்துவதாகவும் முன்னைய அரசாங்கம் கூறியது.

போதனா மொழியில் மாற்றல்; பாடத் திட்டங்களில் மாற்றம்; பாடப் புத்தகங்களில் மாற்றம்.

இவைதான் முன்னைய அரசு செய்தது.

இன்று ஆட்சிக்கு வந்துள்ள அரசு, முன்னைய அரசு கல்வியில் குளறுபடி செய்துவிட்டதாகக் கூறிப் பல மாற்றங்களைச் செய்து வருகிறது.

ஐந்து ஆண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள்தான் ஒரு கட்சி ஆட்சி பீடத்தில் இருக்கமுடியும்.

இன்றுள்ள அரசியல் அமைப்பை மாற்றாவிடில் இதே நிலை தொடர்ந்தும் இருக்கும்.

கட்சிகள் ஆட்சிபீடத்திற்கு வரலாம் அல்லது இல்லாமலே போகலாம்.

ஆனால் கல்விச் சீர்திருத்தம் என்று ஒவ்வொருகட்சியும் சொல்லிக்கொண்டு எதிர்காலச் சந்ததியினரான பிள்ளைகளைத் தம்து அரசியல் சதுரங்கத்துக்குப் பகடைக்காயாக உபயோகிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

பாடப் புத்தகச் செலவு; இலவசக் கல்வி என்ற பெயரில் வசதிக் கட்டணம் என்ற கழுத்தறுப்பு இப்படி எத்தனையோ தொல்லைகள் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல; பெற்றோருக்கும்.

எந்த அரசாங்கம் வந்தாலும், கல்வியில் கை வைக்காத முறையில் அரசியலில் சம்பந்தப்படாத கல்விக் கமிஷன் ஒன்றிடம் கல்வித் திட்டத்தையே ஒப்படைத்துவிட்டால் என்ன?

## 'திரு' நினைவு தினம்:

# இன்றிரவு வானொலியில் அமிர், பிரேமா, காமினி உரை

[கொழும்பு]

அமரர் மு. திருச்செல்வத்தின் நினைவு தினத்தையொட்டி இன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்படவிருக்கின்றன.

இன்றிரவு 9-25 மணிக்கு தமிழ்ச் சேவை ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தமிழிலும், இரவு 7-35 மணிக்கு நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சர் திரு. காமினி திஸநாயகா சிங்களத்திலும், இரவு 7-45 மணிக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர் பிரேமதாசா ஆங்கிலத்திலும் அஞ்சலி உரை நிகழ்த்துவர். [உ]

# பதுளை - கொழும்பு ரயிலில் கொள்ளை

[கொழும்பு]

பதுளை-கொழும்பு தபால் ரயில் பிரயாணிகள் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை இரவு பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலிலேயே இக் கொள்ளை நிகழ்ந்துள்ளது.

ஹாலிஎலவுக்கும்ஒஹியன்ன இடத்துக்குமிடையில் ரயிலை நிறுத்தி ஏறிய ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் பிரயாணிகளிடமிருந்து நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றி விசாரணை செய்த நாவலஓயா பொலிசார், இருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து 542 ரூபா பணத்தையும் இரு கைக்கடிகாரங்களையும் மீட்டனர்.

மேலும் 6 பேரை பொலிசார் தேடி வருகின்றனர். [இ]

## 'தமிழீழ பொருளாதாரத்தில் கடற்றொழிலின் பங்கு'

### 'அமிர்' விளக்கம்

(சுழிபுரம்)

தமிழ் ஈழத்தின் முக்கிய பொருளாதாரத்துறை மீன்பிடித் தொழிலேயாகும். எங்கள் பகுதியிலுள்ள கடல்பிரதேசங்கள் மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வாய்ப்பான இடங்களாகும். எங்கள் வாழ்வு வளமாக நாம் மீன்பிடித் தொழிலை நன்கு பயன் படுத்த வேண்டும். தற்பொழுது கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு உள்ள பாரிய பிரச்னைகளையும், கடற்றொழிலால் ஏற்படும் பிரச்னைகளையும் நிச்சயம் நான் தீர்த்து வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டே தீருவேன்.''

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவு சங்கம் கூட்டிய கடற்றொழில் சம்பந்தமான மகாநாட்டில் உரையாற்றும் பொழுது கூறினார்.

மகாநாடு பண்டத்தரிப்பு மீனவர் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. மு. தம்பியையா தலைமையில் நடைபெற்றது

வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசு பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், ''எங்கள் கடற்றொழில் பல் வகையிலும் விரைவில் அபிவிருத்தி அடையவேண்டும். தொழிலாளர் தெரிவித்த கருத்துக்களை நான் நன்கு கவனித்தேன். இவற்றில் சிலவற்றை நாம் உடனடியாக தீர்த்து வைக்கலாம். எங்கள் பகுதியில் வாழும் மீனவர்கள் அடையும் கஷ்டநஷ்டங்களை தெரிந்தே எங்களுக்கு கிடைத்த சில வாய்ப்புக்களைக் கொண்டு உதவிகள் செய்து கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு எனது பங்கை நான் என்றும் வழங்குவேன்'' என்றார்.

சங்க அங்கத்தவர்களின் தேவைகள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது

சங்க இயக்குநர்களில் ஒருவரான திரு நா பொன்னம்பலம் நன்றியுரை நிகழ்த்தினார். (உ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

அரசினர் காரியாலய ஊழியர் சேவைச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் . வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. வாசுதேவநாணயக்கார உரை நிகழ்த்துவார். [க]

## நாளை நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் நடாத்தும் நாவலர் குருபூசை நாளை காலை நாவலர் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

காலை 9 மணிக்கு பூசை, ஆராதனையுடனும் தொடங்கும் குருபூஜையில் 'முத்தமிழ் அரசி' என்ற பொருள் பற்றி செல்வி புஸ்பா செல்வநாயகம் சிறப்புரை வழங்குவார். அதைத் தொடர்ந்து புராணபடனமும், நல்லை ஆதீன பண்ணிசைப்புலவர் எஸ். ஆர் திருஞானசம்பந்தனின் பண்ணிசைக்கச்சேரியும் திரு. எஸ் அரியரத்தினத்தின் புல்லாங்குழலிசை விருந்தும் இடம்பெறும்.

**நாயன்மார்கட்டில்**

யாழ். சைவசமய அபிவிருத்தி மன்றமும், யாழ். திருமுறை மன்றமும் இணைந்து நடத்தும் நாவலர்விழா இன்று ஆரம்பமாகிறது' ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் கோவிலில் நடைபெறும் இவ்விழா நாளை தொடர்ந்து நடைபெறும்.

**சைவபரிபாலனசபை**

சைவபரிபாலன சபை ஆதரவில் நாளைக் காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாவலர் குருபூசை நடைபெறுகிறது. திரு. நம. சிவப்பிரகாசம் தலைமையில் பிற்பகல் நடக்கும்நிகழ்ச்சியில் திரு மு. சதாசிவம், வித்துவான் க. கணபதிப்பிள்ளை, பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆகியோர் விரிவுரை யாற்றுவர். ...... (அ)

## 5 அமைச்சர்கள் ராஜினமா!

விஜயவாடா, டிச. 1

புயல் நிவாரணப் பணிகளை அரசு சரிவரச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டின் மீது ஆந்திரப் பிதேசத்தின் ஐந்து அமைச்சர்கள் ராஜினமாச் செய்துள்ளனர்.

## கீரிமலை கொலை வழக்கு:

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

கீரிமலை கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். ஜூரி சபையினர், விசாரணை நடுவில் தனிமையில் கூடி ஆலோசனை செய்தபின் எதிரி நிரபராதியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரியை நீதிபதி விடுதலை செய்தார்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் ஜஸ்டிஸ் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில், 75-ம் ஆண்டு ஜுலை மாதம் 15-ம் திகதி கீரிமலையில், அழகன் கந்தநாதன் அல்லது செத்தல், தர்மலிங்கம் அல்லது தருமு ஆகிய இருவரும் விஜயரத்தினம் அல்லது லோகன் என்பவரை கட்டுக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரியான கந்தநாதன் அல்லது செத்தல் இச்சம்பவம் நடந்தபின்னர் கொலை செய்யப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டதால், 2ம் எதிரிக்கு எதிராக விசாரணை நடைபெற்றது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினார்.

சிங்களம் பேசும் ஜூரிசபை முன்னிலையில் விசாரணை நடைபெற்றது [க]

## சகல உரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக அனுமதி பற்றிக் குறிப்பிட்ட நிதியமைச்சர் ''சகல தமிழ் மாணவர்களுக்கும் பல்கலைக்கழகஅனுமதிவழங்கப்படும். இதற்காக எல்லா இடங்களிலும் வளாகங்கள் திறக்கப் படுமென்றும் கூறினார்.

ஒரு கட்டத்தில் நிதியமைச்சர் ''சோஷலிஸ நாடுகளில் எல்லா இன மக்களும் ஒன்றுகவே வாழ்கின்றார்கள். இதன்மூலம்பல அபிவிருத்தித் திட்டங்களை அங்கு நிறைவேற்றமுடிகின்றது என்று கூறியபோது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு சோஷலிசநாடுகளில் வாழும் சகல இன மக்களுக்கும் அவர்களது சுயநிர்ணய உரிமைகள் உட்படச் சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

அப்போது பிரதமர் குறுக்கிட்டு, ''அவற்றை நான் தரமாட்டேன் என்று நீங்கள் ஏன் நினைக்கின்றீர்கள். புதிய அரசியலமைப்பில் இவற்றை நான் பாதுகாப்பேன்'' என்று கூறினார். (ம)

## தமிழர் கூட்டணி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களையும் மீறியதற்காகபேரவை உறுப்பினர் பதவியை அவர் ராஜினமா செய்யவேண்டும். இதுசம்பந்தமாக கடிதம் வெள்ளிக்கிழமை (இன்று) அவருக்கு அனுப்பப்படும். என்று திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழருக்கு பாராட்டு

சென்னை, டிச 1

கலைஞர் கருணாநிதியை கைது செய்ததை ஆட்சேபித்தும் அவரை விடுதலைசெய்யக்கோரியும் இலங்கைத்தமிழர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்கு தி.மு.க. செயற்குழு பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (கி-இ)

## சிறிமாவின்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருவதால் அதிலுள்ள உறுப்பினர்கள் தமது பல்வேறு அபிப்பிராயங்களையும் தெரிவிக்கமுடியாத நிலையிலிருக்கின்றார்கள்.

உத்தியோகங்களுக்குப் மற்றும் தேவைகளுக்கும் எம்.பிக்கள் வழங்கும் சிபார்சுக் கடிதங்கள் ஊழலுக்கும் சட்ட விரோதச் செயல்களுக்கும் வழி வகுக்கும்.'' (ம)

## விபத்து மரணம்

(நெல்லியடி)

எட்டுநாள் சிசு ஒன்றுமூச்சுத் திணறியதால் மரணமான சம்பவமொன்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளது.

வடமராட்சிப்பகுதித் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். புவனேந்திரன்விசாரணை நடத்தினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Jaffna. Telegrams Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.